ஸ்ரீராமஜெயம்.

கஜேந்திரமோக்ஷம்.

மூலபாடம்.

திருவடிதாசர்

செய்தருளியது.

இஃது

எட்டுப்பிரதிகளில் பாடந்தோறும் ஒன்றுக்கொன்று

ஒவ்வாமலும் - எழுத்து - சொல் - பொருள் - தொடர்ச்சி யில்லாமல்

சிதைந்தும் இருக்கின்றதை விலக்கி, யாவருக்கும்

உபயோக மாகும்பொருட்டுச்

சென்னைமாநகரத்து

ஞளோதிங்போர்ட்மாநேஜர் - பூவைசியப்பிரபு

சிற்றேரி

ஙா-ஙா, அருணகிரிமுதலியார்

கேட்டுக்கொண்டதால்

காஞ்சிபுரம்

லக்ஷ்மணமுதலியாரால்

பலபிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து பிழைகளைத்திருத்தி

பு - வீராகவமுதலியாரால்

பரிசோதிப்பித்து

தமது

திராவிடதீபிகைஅச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

சாலிவாகனசகாப்தம் - தூஎசுரு - ரூசீ - சரியான, சுபகிருது வரு ஆனிமீ.

இதின்விலை - அணா,

ப.வீராசாமி
புத்தகம்

நன்ருக. குருவாழ்க. குருவேதுணை,

கஜேந்திரமோக்ஷம்.

காப்பு.

பார்புகழ்கஜேந்திரன்றன்பரகதிகதையையன்பால்
ஏர்தமிழ்கவிபாடிசொல்லவென்னுளத்திருந்துகாப்பாய்
வார்திரைகுதித்துவாளைவயற்றலைநாடிர்பாயுஞ்
சீர்குருகூரில்மேவிசிந்துரத்தமர்ந்ததேவே.

பூதன்பேய்பொய்கைமாறன்புகழ்மண்டங்குடிமன்மங்கை
நாதன்றென்புதுவைவந்தநன்முனிகோதைதொண்டர்
பாததூள்மழிசைமன்னன்பாணன்கோளூர்மன்ருளிகள்
தோதகப்பிறப்பைநீக்கத்துணையெனக்கொளாருமேமால்.

மங்குறேய்தெங்குபாளைவாவியிற்றேற்றக்கண்டு
அங்குரவாளைபாய்ந்துவச்சங்கொண்டிட்கும்புதார்
தங்குமாவெதிராஜன்றன்ருளிணைசிரமேற்கொண்டு
கங்குலெல்லினுமன்னுணக்காதலோடகத்திற்கொள்வாம்.

கனங்குழலசிகண்முல்லைபல்லென்க்கருதுமாதர்
தனமனையெனுமூவாசைதடிந்தமாவெதிராஜன்றனி
வனபதமடைந்தநான்கோடெழுபதுமகுடச்சிங்கா
தனக்குருராயர்தாள்கள்சந்ததமிறைஞ்சிநிற்பாம்.

சாதகக்கடல்கடக்கச்சதாதிருவாய்மொழிக்கு
மேதகுமுப்பத்தாறாயிரப்படியிடைந்ததாய
மாதவற்கடியனம்மணவாளமாமுனியின்சீர்த்தி
நாதகவழுத்தியேத்திநண்ணுதுமவனற்றாளே.

நூல்.

ஜெகதலத்தரசனானச்செறிபரிச்சித்துராஜன் *
சுகர்பதம்போத்திசெய்துதும்பியைப்பொருதிநின்ற *
மாபலமுதலைதன்னைவதைத்தவாரணத்தையன்று *
கசபதிவூர்திகாத்தகாரணஞ்சொல்லுமென்றான். (௧)

சொல்லிலெயரிமைச்சொல்லுஞ்சொல்லதுசொல்லதாகும் *
அல்லெனும்வினையுநீங்குமறிவுமேலறிவதாகும் *
வல்லதாம்பேரின்பத்தைமருவியுண்டிருக்கலாகும் *
நல்லதுகேட்கலுற்றாய்நாதனேசேளுமென்றே. (௨)

மாயவனருளினலேவகுத்திடுமுலகிற்கியாதி *
வியாதமாரிஷ்முன்னாளில்விளம்பியகதையைப்பாண்டு *
சேயெனுந்தருமனுக்குச்செப்புநாரதர்சொற்கேட்டு *
நேயமாயானுஞ்சொல்வேனெறியுடனிருந்துகேண்மோ. (௩)

சீருறுகலசமப்பிற்றிடவொன்றுண்டதனின்மீது *
மேருவுண்டதற்குமூன்றுமின்னியசிகரமுண்டு *
தூரமுமகலந்தேவர்தொகையினாயிரமாங்காதம் *
காரணமாயிருக்குஞ்சிலையெலாங்கனகநேராம். (௪)

அன்னிலைமுனிவர்தேவருந்தவம்புரிந்துநெஞ்சில் *
உன்னியபொருளைமாயோனுகந்தளித்திடவேகொள்வர் *
கின்னரர்கருடர்க்கியாதிசேசரர்முதலாய்வாழ்வர் *
மின்னுமவ்வனத்திலுற்றபெருமையுமுரைக்கலுற்றாம். (௫)

மாதளைமாவிலங்கமராமரம்பாரிசாதம் *
சூதநாரத்தைவில்வஞ்சுந்தரக்கமுகிலந்தை *
தாதுசேர்தேவதாரிசந்தநங்கதலிக்கொன்றை *
சீதளமகிழ்செந்தாழைசெம்மரஞ்சம்பசோகம். (௬)

சன்னலாலத்திப்பாலைகாஞ்சிரமிலுப்பைவேம்பு *
புன்னைசாம்பிராணிவேங்கைபுன்குமந்தாரைமூங்கில் *
வன்னிசண்பகம்லவங்கமரகதம்வயிரமாச்சா *
தென்னுருத்திராக்ஷநெல்லிதேக்குபாதிரிபலாவும். (௭)

முருக்கெலுமிச்சையிஞ்சிமுந்திரிதமர்த்தம்வேலும் *
நெருக்கியவரசடாணைநேரிலவஞ்சிதாலம் *
செருக்கிபசுடுக்காய்தான்றிசெறிபலத்தருவுமன்றி *
மருக்கொழுந்துவபமுல்லைமல்லிகைவலைசுபனேசம். (அ)

அவ்வனந்தன்னிலேவொட்டகம்பரியாளிசிங்கம் *
கவ்வியவேங்கையேனஞ்சரடிமான்கலைகடம்பை *
எவ்விடம்பார்க்கிலுங்காரொருமையும்பசுவுஞ்சேவும் *
ஒவ்வியகவிகள்மற்றுமுண்டெனுமிருகமுண்டு. (௯)

சக்கரவாகப்புள்ளுஞ்சாதகஞ்சிகிசகோரங் *
குக்குடந்தாராவன்னங்கோகிலங்கிள்ளைகாகங் *
கொக்குடன்கல்விநாரைகூளிபேராந்தைகூகை *
தக்கவல்லூறுடன்ராஜாளிபல்பறவைபோகம். (௰)

பலபலமிருகமார்ப்பும்பக்ஷிகளார்ப்புஞ்சாயுஞ் *
சலதியினார்ப்புந்தாருதருசருகார்ப்புஞ்சால *
கலைதெரிமுனிவர்தேவர்கருடர்கந்தருவரார்ப்பும் *
நிலையராமங்குணத்தைநிகழ்த்துதற்கருமையாமால். (௰௧)

தாவியககனவீதிதழைத்தவண்டருக்கள்மாறு *
பூவிரம்பிஞ்சுங்காயும்பொழிசுவைக்கனிகளோடும் *
வாவிகள்வீசும்வாசவாரிசங்குவளையாம்பல் *
மேவியேயிருக்குமந்தவெற்பினைச்சூழ்திக்கெல்லாம். (௰௨)

பூரணமாகநிர்த்தம்பொழிமதுவனத்திலுள்ள *
வாரணக்குழவிமிஞ்சிமதத்துமற்பொருதுங்காலை *
தாரணிநடுங்குஞ்சிங்கஞ்சார்த்தூலஞ்சர்ப்பமிந்த *
காரணமேதோவென்றுகலங்கியேவெருவியோடும். (௰௩)

பன்றியைதுரத்திப்பற்றிப்பாரினில்மோதுஞ்சின்ன *
அன்றிலைப்பிடித்துவீசுமரங்களையடித்துச்சாடும் *
குன்றினைக்குலுங்கத்தாக்குங்குரங்கினைக்குகையிற்சேர்க்கும் *
மின்சிறைபக்ஷிவானமேவியேபறக்கச்செய்யும். (௰௪)

பாரியசிங்சம்பாளிபபந்துதம்மலையிலேறும் *
கீரிகளுடும்புபூனைகிண்டிதம்வளையிற்புகும் *
வரியபுலிபல்லூகம்வெருண்டுதம்முழையிலேகும் *
நீரினில்மயிடமூழ்கிநீந்தியேதிரியுமன்றே (௧௫)

கன்னலைமுறித்துமெல்லுங்கதலியின்கனியைத்தின்னும் *
செந்நெலைபுசிக்குந்துள்ளுஞ்செறிவிளாங்கனியைக்கொள்ளும் *
அந்நிலையானைக்கெல்லாமரசனாயிருக்கும்யானை *
தன்னினம்பிரிந்துகோடிகரிணியோடிருந்ததன்றே. (௧௬)

அல்லவோர்நாளிலேயுமறிந்திடாவத்தந்திக்குத் *
தொல்லைநாட்செய்ததீமைதொடர்ந்தநாளின்னதாகி *
எல்லையாம்வனத்தைவிட்டுவெண்ணிலாகரிணியோடு *
மெல்லுநல்லுணவுதேடிமேய்ந்ததுவனேசந்துரம். (௧௭)

தாமரையல்லிநெய்தறண்புனற்கண்டுதோய *
நாமலர்நறையுண்வண்டினாதகீதத்தினாலும் *
தோமறுபறவைபேசுந்தொனியினின்முழக்கத்தாலும் *
காமன்றனம்பினாலுங்காதலேமிகவுமாகி. (௧௮)

வாலெடுத்துயரவீசிவானிலேதுதிக்கைநீட்டி *
மாலெடுத்தரிவையோர்கள்வதனமேல்வதனஞ்சேர்த்து *
காலொடுகாலைப்பின்னிகரிணியர்மீதிலன்பாய் *
மூலத்தைமொழிந்துசெய்யும்லீலையைமொழியலாமோ. (௧௯)

பங்கயப்பொய்கைதன்னைப்பார்த்துடன்பரிவாய்க்கோடி *
மங்கையருடனேகூடவாரியினிழிந்துதங்கள் *
அங்கமுங்குளிரத்தோய்ந்துவருந்தியேதாகந்தீர்த்து *
பொங்கமாய்த்தும்பிராஜன்புதுமலர்கொய்யுங்காலை. (௨௰)

முன்பொருசாபத்தாற்கந்தருவனுமுதலையாகி *
தன்பெரும்பலத்தினாலேஜலத்திடையிருந்துதந்தி *
பின்வருங்காலைநாடிப்பிடித்திடவுதைக்கநொந்து *
வன்பெருங்கரவுமீண்டுவந்துமுன்றாளைப்பற்றி. (௨௧)

பற்றியேயிழுக்குமந்தப்பாரியமுதலையின்வல் *
நெற்றியைப்பிளப்பனென்றுநீண்டதன்றுதிக்கையாலே *
மொற்றிடச்சரவுநீரின்முழ்கியேமேல்வந்தெய்தி *
வெற்றிதோர்வையுமிலாமல்வெகுண்டுபோர்செய்யுங்காலை. (௨௨)

கூடியேவந்துநின்றகரிணியர்கோடிபேரும் *
வாடியேவெருவிமெத்தமயங்கியேகரையிலேறி *
நாடியேநோக்கிப்போநாதனுக்கிந்தபாடு *
தேடியேவந்தானம்மாற்செய்வதெதென்றுகூறி. (௨௩)

ஆள்தனைப்பிரிந்துசெல்லவரிவையர்குழாங்கடங்கள் *
தாளெழுந்தேகாநின்றுதயங்கியேயலைபுமந்த *
வேளையிற்பற்றினின்றகரவினைவிசியிப்போ *
மீளுவனென்றுதந்திமிகவுமேயிழுக்குங்காலை. (௨௪)

கரையின்வாயிழுக்குந்தந்திகரவுநீர்நடுவிழுக்கும் *
வரையுடன்வரையெதுத்துமற்பொருதுவபோல்வாயில் *
நுரைபெறவொன்றுக்கொன்றுநோக்கியேதாக்கியங்கம் *
உரையடத்தசைகள்சிந்தவுதிரமும்பெருகுமன்றே. (௨௫)

நாற்பெருந்திசையுமண்ணுநடுங்கிடநாகராஜன் *
ஆற்பரித்துறுதிகொண்டுயப்பினைக்கிழியமோதி *
காற்பெருங்குன்றுபோலக்கடித்திடுங்கரவைக்கண்டு *
கூற்பெரும்பிண்டம்விழப்புடைத்ததுதுதிக்கையாலே. (௨௬)

அடியதுபட்டுமூர்ச்சையாகியேதெளிவுகொண்டு *
கொடிதெனுங்கரவுமீறிக்கோபமாய்த்தந்தியின்வால் *
அடியெனுமூலந்தன்னிலழுந்தவேநகத்தாற்கீறி *
நெடிதெனுமூச்செறிந்துநீளொலாமுலவுமன்றே. (௨௭)

விழுமெழுந்திருக்குஞ்சேறுமேலுமாய்க்கீழுமாகும் *
சுழிபடநீரையெல்லாந்துதிக்கையாற்குழப்புமச்சக் *
குழுவுடன்கடகஞ்சிப்பிகூர்மமண்டூகமெல்லாம் *
பழுதிதுவேதோவென்றுபயந்துபாதாளஞ்சேரும். (௨௮)

இப்படிக்கொன்றேடொன்றுயிரவிதுயகலெவ்ணமல் *
அப்பிலாயிரமாண்டாக்ஷியார்ப்புகொண்டிருந்ததென்று *
தப்பிலாமுனிவன்சொல்லதரணிடன்சரங்கள்கூப்பி *
எப்படிவிருந்ததாம்பலெனவவன்சொல்லலுற்ருன். (௨௯)

வேறு

தந்தியுநெடுநாட்கராவுடன்ருக்கியேசமர்செய்துலம் *
நொர்துவாடியெநாலுதிக்கையுநோக்கியேமனமேக்கமாய் *
மூந்துதானுறவெற்பிடத்தையுமுனைநலைமசெய்திடுமுறைமையும் *
எந்தநாளிலெகாணுவேனினியென்றுயின்னுமியம்புமால். (௩௰)

தாதுலாவும்வண்ணுவிசேர்வனந்தன்னிலேதமர்சூழவே *
தீதிலாமலனேகநாள்வளாசெல்வமாசவிருந்தநாம் *
வதுசாரணமோதெரிந்திலமிங்குவந்துதிகைப்பதிப் *
போதுநாமினிசெய்வதேதெனவென்றுநின்றுபுலம்புமால். (௩௧)

சுற்றமுந்துணையானபேனாயுஞ்சுந்தரத்தெழிறேசைமார் *
பத்துலக்ஷமதானபேர்களைப்பாகனாப்பதியைப்பிரிந் *
தித்தலத்திடைவந்தசப்படவென்றயன்சிரமெழுதிடப் *
பெற்றபேறிதுதானெவென்றதுயின்னுநின்றபுலம்புமால். (௩௨)

சுரும்புதேனைபருந்தியேசரம்பாடியாடிடுஞ்சோலையில் *
கரும்புசெந்நெல்கவித்துறுங்கதலிப்பலாநலகாய்கனி *
அரும்பிலைத்தளிர்பூவையாதியருந்தியங்குறையாமனும் *
கருங்கராவிடவாயகப்படவந்தகாரணமேதெனும். (௩௩)

மதத்துவிரியக்குஞ்சரக்குழுதன்னெடேர்ந்தவனத்திடை *
எதிர்த்தகேசரியன்றிநாமெயருமைக்கிடாப்புலிமற்றதை *
அதிர்த்துவோடிவளைத்துசெற்றிசெர்தடக்குமென்னடவான்மையெவ் *
விதத்திலுமிலைதவெல்லவுமரிதென்றுநின்றுவிலம்புமால். (௩௪)

கன்றிகண்ணீருதிர்த்திடும்பலகாரியங்கணினைத்திடுங் *
குன்றுபோலவிருந்தமேனியுங்குன்றிடுமிகவுங்குறைநந் *
தின்றுநாமினிசெய்வதென்னெனியங்கியேமனமெலிவிறுவ் *
நின்றிடுந்தலைநாளிலேசெய்தநிந்தையென்றுநினைந்திடும. (௩௫)

ஆறுபக்கெனும்வருஷமும்போர்நொந்துவாடியகுஞ்சரம் *
பூருவத்துவரஞானம்வந்துபொருந்தியேவினைபோக்கிட *
வேறுதிக்கிலையென்றறிந்ததுவேண்டியேசர்வேசனைக் *
கூறியேநெறிகொண்டுமேகுணத்தினாலேதுதித்திடும். (௩௬)

ஆதியாகியுநடுவுமாகியுமந்தமாகியனாதியாய்ச் *
சோதியாகியுஞ்சுரூபமாகியுஞ்சுருதியோதிடுபொருளுமாய் *
நீதியாகியுநெறியுமாகியுநேசர்தம்மிடைநிலையுமாய் *
நாதனாகியும்வீறுமீசனைநம்பினேனெனமுறையிடும். (௩௭)

மண்ணுமாகியும்விண்ணுமாகியும்வாயுதேயுவம்போதியாய்க் *
கண்ணுமாகியுமுயிருமாகியுங்காயமாகியமாயையாய்ப் *
பெண்ணுமாகியுமாணுமாகியும்பேடியாகியும்பெருமையாய் *
எண்ணெணுவடிவாகிநின்றிடுமீசனேயபயம்மெனும். (௩௮)

உருவுமாகியுமருவமாகியுமொருமையாகியுமிருமையாய் *
மருவுமாகியுமலருமாகியுமாதவத்தவர்மதுரமாய்ப் *
பெருதுமாகியுஞ்சிறிதுமாகியும்பேதமாகியபேதமாய்க் *
குருவுமாயுபதேசமாகியகோவெனத்துதியென்றிடும். (௩௯)

மனமுமாகியுமொழியுமாகியுமருவியேவனரூபமாய் *
இனனுமாகியுஞ்சசியுமாகியுமெறிதிரைக்கடல்மேருவாய்த் *
தனையனாகியுந்தந்தையாகியுந்தாயுமாகியுந்தமருமாய் *
அனையுமாகியபொருளெனும்பரமானவாவபயம்மெனும். (௪௰)

அறிவுமாகியுமறதியாகியுமடியவர்க்கெளிதாகியுங் *
குறியுமாகியுங்குணமுமாகியுங்குலமுமாகியுந்தொழிலுமாம் *
பொறியுமாகியும்புலனுமாகியும்புத்தியாகியும்பின்றொடர் *
திரிகுணாதிபனாகாரணதேவனேயபயம்மெனும். (௪௧)

அரனுமாகியுமரியுமாகியுமயனுமாகியுமலாதுமாய் *
நரருமாகியுஞ்சுரருமாகியநாதமாயும்பிரணவமுமாய்ச் *
சரமுமாயிடைபின்கலைநடுசாக்கிரசொற்பனசுழுத்தியாய்த் *
துரியமாகியதீதமாகியசுருடனேயபயம்மெனும். (௪௨)

வேறு.

உலகமீரேழுநினைவிடையளித்தவொருவனீமூவுருவாகிப் *
பலபலவிதமாயிருவகையுயிர்ப்பின்பரவியுட்பிரமுமாய்நிறைந்த *
நிலைமைநீயறிவைநின்னையாரறிவர்நீவகுத்திடுமிருளமயினால் *
அலைபடப்படலேனஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளுமால்.

காயமேநிலையென்றுறுவத்தழுந்தங்கருத்தையுந்திருத்திடவறியேன் *
மாயமாம்பாசப்பவக்கடற்கடந்துன்மதுரவாரிதியுணவறியேன் *
வியவும்பிறவும்வகுத்திடுங்கருமம்வினைலேசெய்துசெய்தலைத்தேன் *
ஆயும்வாறறியேனஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளுமால்.

தேனில்வீழீப்போல்வலைப்படுகயல்போல்சிறுவர்கைப்பறவைசிக்கியபோல்
கோனிலாப் படைபோல் மழையிலாப் பயிர்போல் கொம்பிலாப் படர்
[கொடியதுபோல்
கானகத்திருளின்முடவனூர்வதுபோல்கலங்கியேகராவிடைமெலிந்தேன்
ஆனெனின்னடிமைக்கடிமையாய்நீவந்தபயமீந்தென்னையாளுமால்.

இருவினைக்கிடமாயெடுத்தவிவ்வுடம்பையென்னவென்றினிதெனவிருந்து *
பொருந்தியதுயரின்னலினிலிலைபோற்பொலிமனமுருகிடப்படலேன் *
உருவினுக்குயிராயுயிரினுக்குணர்வாயொளியினுக்கொளியதாயொளிரும்
அறிவினுக்கறிவேயஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளுமால்.

உனைபலாதொளிருமுலகிலைநீயுமுலகிலாதொளிர்வதுமில்லை *
நினைவிலேகனவுங்கனவிலேநினைவும்நேரிடும்நிலைமையாய்நின்றாய் *
கன்வினைக்கரவின்பிணிப்பினின்றடியேன்களையிலேறிடத்தவருள்வாய்
அனைவருக்கரசே கருணைவாரிதியே யண்ணலே யென்னையாளுமால்

பொறிபுலன்விஷயத்தழுந்திமெய்மறந்துபுலைகுலைகளவினுக்கிசைந்து
நெறிமறையொழுகும்படின்றுறந்திழிவாம்நீசர்தந்நேயமேநிலையாய் *
குறியுறுநினைவுகொண்டிருவினையின்குரம்பையினடலையிலுழன்றேன் *
அறிவதையறியேனஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளுமால்.

பூதமைந்துதித்துப் பொறிபுலன் கரணம் பொருந்துமென் றவத்தையுங்
நாதமீதாகுந்துரியமேற்றுரியநடனமென்றின்றனைநாயல் [கடந்து
ஓதுவார்பணிவார்க்குவந்தசேர்பொருளாயுதவுவபோலினிவந்து *
ஆதரவுடனேயஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளுமால் (சக)

சாக்கிரவவஸ்தைசொப்பனவவஸ்தை தயங்கியசுழுத்தியினவஸ்தைப் *
போக்கிடவறியாப் பொறிபுலன்வசனாய்ப்புன்றொழிற்புரிந்தலைவேனைக் *
காக்கவேயுனக்குக்கடனதாமிந்தக்கரவெனும்வினைதனையிருகூர் *
ஆக்கியேயடைக்கின்றிறைகொடுத்தருளி யபயமீந்தென்னையாளெனுமால்.

சகலமுமுனதேமனத்துதித்ததன்மையினாலறியாமல் *
பகலிரவிலனைபிறப்புமூப்பிறப்புப்பண்டுபின்னிறைகுறைநாளுஞ் *
சுமந்துயர்நன்மைதீமைமற்றிவற்றின்சுழற்பட்டுஞ்சிந்தையின்மயக்கத் *
தகவினைநீக்கியஞ்சலென்றினியுன் னபயமீந்தென்னையாளெனுமால் ௫.

தொல்லைநாட்செய்தவினையினாலடுத்ததும்பியின்றொக்குழல்வேனை *
வல்லதாங்கரவினுபத்திரத்தடியேன்வாதனைப்பொறுத்திடப்படலேன் *
நல்லதாமுனதுபாதபங்கயத்தை நல்திபிக்கரவினுற்படுமேன் *
அல்லலைபகற்றி யஞ்சலென்றினியுன் னபயமீந்தென்னையாளெனுமால்.

தென்றிசைவடக்குக்கிழக்குத்திசைமேற்குத்தெரிந்திடவறிகிலேனுழந்த *
புன்சமுசாரக்கடலிடைவீழ்ந்துபொய்யைமெய்யென்றிசைந்துழலும்.
வன்றுயர்தீர்த்துனருளெனுநாவாய்வழங்கிலக்கரையிலேறிடுவேன் *
அன்பருக்கெளியாயஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளெனுமால்

பூதலத்துதித்தநாளிதுவரைக்கும்பொய்வெருவந்தநன்னயத்தின் *
வாதனைக்குள்ளாய்மயங்கினேனுனதுமலரடிவணங்கிடப்பெறிலேன் *
இதெனுங்கருமஞ்செய்யவேதுணிந்தேன்செய்ததுன்செயலெனவடியேன்
ஆதிநாயகனே யஞ்சலென்றினியுன் னபயமீந் தென்னையாளெனுமால்.

முற்பிறப்பதனிற்செய்தசிவினையின்மும்மலவுடலெடுத்துலகில் *
உற்பவித்தினியகதிபெறவினதுவுண்மையினாலறியாமல் *
கற்பனைநிலையேநிலைமையாய்நிகழுங்காலமும்வீணிலேகழித்தேன் *
அற்புதப்பொருளேயஞ்சலென்றினியுன் னபயமீந்தென்னையாளெனுமால்.

வேறு

இவ்விதத்தினிற்புண்டரீகமுமீசனைத்தொழுதேத்தியே *
கவ்விநின்றிடுமுதலைவாதனைக்கழியும்வாறினிகாண்கிலேன் *
எவ்விதமினியேதுசெய்குதுமென்றுயேகமனத்தனாய் *
அவ்வுமுவ்வுடன்மவ்வுமாகியவாதியேயபயம்மெனும். (௫௬)

நானிலத்திடைவீதமெண்பதுநாலிலக்கஞ்ஜீவனென் *
றானெடுத்தசராசரத்தினுலாவிநின்றிடுமுரவுதான் *
யானுரைத்திடவல்லனோவெனையாதரிப்பவராரினி *
நீனவுன்னிருபாதமே திதேவனேயபயம்மெனும். (௫௭)

கள்ளமாகியெயென்னைவந்துகடிந்துபற்றிபகரவினைக் *
தள்ளியேவிடவேறுதிக்கிலைசாமனேயினிதயைசெயாய் *
எள்ளிலேயுறையெண்ணெய்போலவிரேழுலோகமிசைந்துதான் *
உள்ளுமாகிபுறம்புமாகியவொருவனேயபயம்மெனும். (௫௮)

வேறு

யாருடைக்கண்களாகியலரியிந்துவுமிருக்கும் *
யாருடைமகிமைதன்னையருமறைநூல்களோதும் *
யாருடைபாதந்தன்னையனைவருந்தொழுமண்டங்கள் *
யாருடைவயிற்றொடுங்குமவன்றனக்கபயமென்னும். (௫௯)

எவனுடையருளினாலேபிறக்குமீரேழுலோகம் *
எவனுடைவயிறுதன்னிலிருக்குமிவ்வுயிர்களெல்லாம் *
எவனுடைமு த்திவந்துயென்னுணுதேவராகும் *
எவனுடையருளால்காக்குமவன்றனக்கபயமென்னும். (௬௰)

உண்டென்பரடியார்பங்கிலுத்தமரிடத்திலேயும் *
உண்டென்பபொருமையானயோகியருளத்திலேயும் *
உண்டென்பர்சாதுபக்கமுறுதிமெய்புரையிடத்தும் *
உண்டென்பரந்ததெய்வமுள்ளதோயிலையோவென்னும். (௬௧)

உண்டென்பர்புவியின்வானினுட்பிறந்திலைசகளெட்டின் *
உண்டென்பர்பசலிராவிநெளிபெறுகதிரிரண்டின் *
உண்டென்பரணுபின்மேருவோமெனுமெழுத்திலெங்கும்
உண்டென்பரந்ததெய்வமுள்ளதோவிலையோவென்னும் (௬௨)

அந்தரந்தன்னையானைபண்ணைந்துயார்த்துச்சொல்லும் *
எந்தனைக்காக்கத்திக்காரில்லையோயிங்கேயாரும் *
வந்தநேரத்திலீசன்வந்தெனைக்காப்பானென்று *
சிந்தனைப்பண்ணுமெட்டுத்திசையினைத்திரும்பிப்பார்க்கும் (௬௩)

இந்திரன்முனிவர்தேவரிருடிவெண்டிக்குளோரும் *
சந்திரன்பரியேழுந்திசங்கரனயன்மற்றோரும் *
அந்தரவிதிநின்றுயானையின்முறையைக்கேட்டு *
எந்தடைவிதுக்குத்திக்காவொன்றுதாந்துயரினின்றார். (௬௪)

இப்படிசுகருஞ்சொல்லயிறைஞ்சிமன்னவனகைத்து *
மைப்படிகண்டன்வேதன்வாசவன்மற்றுளோரும் *
எப்படிபார்க்கலுற்றாரிடர்தொலைத்தியத்தைக்காக்கச் *
செப்பமில்லாமனின்றசேதியையுமாமினென்றான். (௬௫)

துங்கமாமுனிவன்கேட்டுச்சுடர்முடியரசைநோக்கிச் *
சங்கையிலாமலத்திதற்பரன்றனையேநாட *
எங்களைநினைத்ததில்லையென்றயன்சிவன்மற்றோரும் *
அங்கனேபார்த்திருந்தாரொன்றுமின்னனறயலுற்றான். (௬௬)

வேறு.

அகிலகாரணனாயுனாதரக்ஷகனாயடியர்கட்கெளியனாய்நிறைந்த *
சகலஜீவதயாபரனுமாயுலோகதாயுமாயமலனாய்பரனாய்ப் *
பகவனாய்ஜென்மநாமமிலவனாய்ப்பரத்துவமாயனகனாயவர்வித் *
தகனுமாய்சர்வ சரணியனாயுளறவோ னவன்றனக் கபயமின் றெனுமால்.

நித்தனாய்முனிகளாற்றொழுங்கடவுளாய்நிராமயனுமாயெவர்க்கும் *
சுத்தனாய்ப்பரமபுருஷனாய்கருணாகரனுமாய்க்கதியருட்டேவாய் *
சித்தனாய்விமலனாய்வியாபகனாய்ச்சுருதிபாராயணனாயும் *
அத்தனாயுலோகநியாமகனானோனவன்றனக்கபயமின்றெனுமால். (௬௮)

பராபரப்பிரமமாய்பரஞ்சுடராய்ப்பராட்டுநிற்குணன்றயாநிதியாய் *
விராட்டுபூரணனாய்நாதனின்மலனாய்விபவமாயறுகுணத்தவனாய் *
சுராட்டுதற்பரனாய்பிறப்பிறப்பிலியாய்சிற்பரனெண்குணத்தவனாய் *
சராசரங்கட்குசர்வேசனாய்விரங்குஞ்சச்சிதானந்தனுக்கபயம். (௬௯)

அடியர்கள்கருணாலயனுமாய்சுயம்பாயனைத்திலுமுயலுநற்றேவாய் *
படிமடிவேலைப்பரப்புமாயாலாய்ப்பாலனாயருள்குடையவனாய் *
குடிநடுகலவயேந்திமுச்சுணனாய்குவலயத்தொளிருருவானோன் *
படிறலக்கரவின் வாயினின்றென்னை பரிவுடனருள்வனின் றெனுமால்.

இடிநிகர்கரவால்கால்கரமோய்ந்துவேக்கமாயுயிர்தடுமாறி *
படிவமுமுருகிவாலசைவற்றுபரிவுடனரற்றுபேரொலியால் *
இடியனலப்பாய்கால்வெளிபூவாயென்னுமும்மூர்த்தியின்முதலாய் *
அடிகளாமாதிமூலமேயெனுமம்முனாயரிசெவிநுழைபோழ்தே. (௭௧)

வேறு

பங்கயத்திருவைப்பாரான்பணிமுடிநிழலைத்தேடான் *
சங்குசக்கரமுமேந்தான்தன்னெதிர்தொழுதுநிற்கும் *
இங்கிதக்கருடன்மீதிலேறிடானபத்தைக்காக்கச் *
சங்கையைப்பெற்றபாதசாரியாய்கடுகிவந்தான். (௭௨)

அன்னகரிருந்தபேர்களதிசயமனத்தராகி *
என்னகாரணமீதென்றேயேகமாய்க்கூடிநின்று *
பன்னகாபரணன்றன்னைப்பரீக்ஷைகாண்டிடவரக்கர் *
துன்னினரோவென்றெண்ணித்துயக்குடன்சொல்லலுற்றார். (௭௩)

யோகியர்தமக்குஉத்தருபத்திரஞ்செய்தவாறோ *
கோகனன்மனதுநோகக்கொடியர்கள்புடைத்தவாறோ *
யாகமேபுரியுநாளிலரக்சர்வந்தழித்தவாறோ *
தோகையர்துகிலைப்பற்றிதுர்ச்சனர்களைந்தவாறோ. (௭௪)

துச்சனர்கூடிநின்றுதொடர்ந்தடியானைப்பற்றி *
பச்சைமேனியனுமுங்கள்பரமனெங்கேகாட்டென்று *
மச்சரம்வைத்துமெத்தவாதைசெய்தாரோவென்று *
அச்சுதனடந்தபோதிலனைவருமாலோசித்தார். (௭௫)

நாதனைப்பிரியாலட்சுமிநாயகியுடுத்தசேலை *
யாதிமுந்தாணியந்தபரமனார்பற்றியேகும் *
போதுசானுமிந்தப்புதுமையையறிதுமென்று *
மாதவன்பின்றொடர்ந்துமயிலெனச்செல்லலுற்றாள். (௭௬)

முடியவிழ்கேசஞ்சோரமுகங்குறுவேர்வைகொள்ள *
அடியிணைக்குழையமெய்யிலணிமணியாரமாடக் *
கொடியிடைத்துவளநீலக்கொண்டலின்மின்னல்போல *
நெடியவன்பின்னெருங்கிநேரிழைநடக்கலுற்றாள். (௭௭)

வேறு.

வாமதேவனுங்கௌரியும்விடைவாகனம்மிசையேறியே *
நாமகளுடன்கூடவேமறைநான்முகனன்னமேறியே *
காமனுயிர்க்கிராணிவெண்மதக்கரியின்மீதினிலேறியே *
சோமனுந்தினகரனுந்தேரின்மேற்ருகைமாருடனேறியே. (௭௮)

விண்டலத்தினிலுள்ளபேர்களும்விறுமெண்டிசையோர்களும் *
மண்டலத்தினிலுள்ளபேர்களுமாதவம்புரிவோருமார்க் *
கண்டருங்கௌதமரகஸ்தியர்கௌசிகர்முதலானபேர் *
கொண்டல்மேனியனுக்குமென்றுகுறிப்பறிந்தவர்கூறுவார். (௭௯)

அந்தரத்தொரீஇயருகினிற்றிருவமராரனேர்தொடர்ந்திட *
நந்துவீறிடுநீதொனியதோபலநரியிருந்கிகிரியுமதோ *
அந்தமாகியகருடனுமதோவனந்தனுமதோநித்தியவை *
குந்தமேவியபெயர்களுமதோவென்றுநின்றுகைகூப்புவார். (௮௰)

மாயனேசரணென்பர்வாழ்திருமார்பனேசரணென்பரால் *
ஆயனேசரணென்பரச்சுதவமலனேசரணென்பரால் *
நேயனேசரணென்பர்நான்மறைநிருபனேசரணென்பரால் *
தாயனேசரணென்பர்சென்னியிற்சேர்த்திரண்டுகைகூப்புவார். (௮௧)

வந்ததேவருங்கூடிநின்றுபல்லாண்டிசைத்துவந்தனஞ்செய *
நந்தனுமதுகொண்டிடாமலெநாகமேன்மனநாடியே *
சிந்தையாயதிவேகமாகவெசெல்லும்போதவர்தம்முடன் *
பிந்திமுந்தியுமேகவுற்றனர்தேவர்மாமுனிபிரளயம். (௮௨)

செங்கண்மாலுநடந்துவேகமாய்செல்லவேசெழுந்தாரமாம் *
பங்கயப்புனல்மேவுதும்பியின்பயமகன்றிடவானுறை *
செங்கதிர்த்திகழ்கோடிபோலவேதேசுகொண்டவந்திகிரியை *
மங்கைநாயகனேவியேமுந்திவந்துநின்றனன்கரையின்வாய். (௮௩)

மண்டலமிருபிளவதாகவுமாதிரங்களும்வெடிபட *
விண்டலங்கள்பிளந்ததாகவுமேருவுமிகவுருகவே *
குண்டலஞ்சிரசுந்துலங்கிடகும்பியைப்பொருகரவிரு *
துண்டமாகவெசெய்துமீண்டாரிகையிலாழியுநின்றதே. (௮௪)

வேறு

கரவுதானென்றுவானிற்கதிரவன்கதியிற்செல்லும் *
கரவுதானின்றிருந்தநிலைதனைக்கரந்துபோய *
திரமெனக்கமலந்தன்னிற்றிரிந்திடுங்கரவுமெல்லாம் *
பரமெனக்சென்றுமாயன்பக்கலிற்சேர்ந்தவாறே. (௮௫)

சீதரன்சங்கந்தன்னைதொனித்தனன்செவிடுபட்டு *
வேதனிந்திரனீசானன்விண்ணவர்மெய்மறந்து *
சிதளச்சலதிமேருசுழன்றுடன்றெளிவுகொண்டு *
மாதவன்மீதிலன்றுசொரிந்தனர்மலரின்மாரி. (௮௬)

அந்தரத்திடையின்பேரியதிரவேமுழங்குந்தேவ *
துந்துமிசின்னங்காளைச்சொல்வகைப்பல்லியங்கள் *
திந்திமிதிமிதியென்னதேவர்கள்ஜெயஜெயென்ன *
வந்தனன்செங்கண்மாலும்வாரணத்தருகிலப்போ. (௮௭)

நீரிடைநெடிதுநாளாய்நிலையற்றுநின்றயானைப் *
பாரியக்கரவுமாளக்கண்டுதன்பயமகன்று *
காரியமுடிக்கவிங்குகாரணமாகவந்த *
சீரியதிருமாறன்னைநோக்கியேசிரசையாட்டும். (௮௮)

ஆடியசிரசின்மீதுவரிமலர்க்கையைவைத்து *
வாடினைதுயரமெய்திமனமொருமித்துநம்மை *
நாடினையினியோர்நாளும்நாசமேவாராதென்று *
நீடியவுடலைக்கையாற்றடவினனெடியமாலும். (௮௯)

தடவியவரியின்கையைத்தந்தியுந்தன்கைநீட்டி *
அடவுடன்மோந்துக்கொண்டுவளவிலாப்புளகமாகிக் *
கடவுளின்கருணையாலோங்காரமேசெய்துநின்ற *
உடனெமுன்னுளிலுள்ளவுருவெனக்கொண்டதாங்கே. (௯௰)

சுரர்பதியரனயற்குத்துதிக்கவும்வணங்கவெட்டா *
வரிதனைவலமாய்வந்துவஞ்சலித்தெதிரினின்று *
திருமகளுறையுமார்புந்தேசுலாமுகமுநோக்கிப் *
பரியவகுணங்களெல்லாம்பத்தியாய்துதிக்கலுற்றான். (௯௧)

சிறியவன்றனக்குப்பொன்னின்சீர்முடியளித்தமாலே *
உறுதியாய்ப்பிரகலாதர்க்குரவியசிங்கரூபே *
மறிகரனோதுமூலமந்திரப்பொருளேயாதி *
திரிபுரதகனஞ்செய்யுஞ்சேவகபோற்றிபோற்றி. (௬௨)

கல்லுருமாறிநின்றன்கழற்றுகள்கதுவாமுன்னம் *
நல்லுருபெற்றதென்னோநாதனேமடுவிலுற்ற *
வல்லுருவிடங்கர்வாயின்மடங்கவேவவ்வமத்தவென்றன் *
தொல்லுருதொலைக்குமாறுதோன்றினைவென்றுமென்றே (௬௩)

பண்டுநான்செய்தபாவம்பகடெனப்பெயராத்தாங்கிக் *
கண்டமாவிலங்குக்கெல்லாங்காலனென்றெள்வதாகக் *
கண்டகத்துறையுமித்தகண்டகன்றன்மேலன்பும் *
உண்டெனுமொழிவிளங்கவுகந்துநீவந்ததன்றே. (௬௪)

ஒன்றுமூன்றாகியோதியுறுபொருட்சப்பால்வேறுண் *
டென்றுணாக்கினுநீவையாவெண்ணுதற்கரிமையாகித் *
துன்றுமெய்கிரணமும்நீயெனமறைசொன்னுல்மற்றோர்க் *
குன்றுவதல்லால்வேறுகுணமுண்டோகூறுதற்கே. (௬௫)

மபலெனும்பிறப்பைநீக்கிமாசிலாவுருவம்நல்கித் *
தியக்கமார்துயரிலாநற்றின்சாயதனினேற்றி *
வியந்தரமன்னபேதைவெம்மறலறுத்தபெம்மா *
நயக்கனையனையேனென்முனற்றவமுயன்றதென்றான். (௬௬)

தண்பெருசலதிபூத்தத்தலையுறுமொக்குளேபோல் *
திண்ணிற்றவண்டம்நின்னுட்டோன்றியேசரக்கும்பக்கம் *
கண்சொடுவாயாற்சொல்லவொக்குமோகருணைவாரி *
எண்ணுறுமறைக்குமெட்டாவெழிலுடையமரரேறே. (௬௭)

ஈசனேதேவர்க்கெல்லாமிறைவனேதிகழ்வைகுந்த *
வாசனேயடியார்க்கென்றும்வரதனேயனந்தவெய்யோன் *
தேசுறவடிவேயுன்னைச்சித்தையிற்றரிசிப்பார்க்கு *
மாசிலாப்பதவிநல்குமாயனேசரணமென்றே. (௬௮)

இறைஞ்சியேநின்றயிந்திரப்பிறத்திமன்றனையேநோக்கித் *
துறந்தனைதீமையெல்லாஞ்சுகமினிபெறுவாயென்று *
அந்திருநாதன்சொல்லவரசனுமரிரூபான *
நிறந்தனையெய்திமோக்ஷநிலையதுபெற்றவாறே. (௧௯)

கரவெனுமுருவமாறிக்கந்தருவவடிவமாகிப் *
பரமனைத்தொழுதுவேத்தியலர்மகள்பாதஞ்சேர்ந்துத் *
திரமெனுங்கீதம்பாடித்தேவர்கள்வாழுகின்ற *
புரநிலையாகப்பெற்றுப்போயினனாகூவென்பான். (௨௰)

இந்தநற்கதையைக்கேட்டுவெழிற்பரிச்சித்துராஜன் *
அந்தமாரிஷிபதத்தையஞ்சலிசெய்துநோக்கி *
இந்திரத்தூய்மனாகூவெனுமிருவர்க்குநேராய் *
நந்தல்வந்துற்றவாறுநம்பிநீயருள்தியென்றான். (௨௰௧)

சிந்துபூதலத்தையாண்டசெழுமுடியரசர்தம்மில் *
கந்தலிலறத்தின்கண்ணேகாதலனாகிநின்ற *
இந்திரத்தூய்மனென்பானெழிற்பெயருடையபாண்டிச் *
சந்ததிவழிவந்துற்றான்சதுரங்கபலமுமுள்ளோன். (௨௰௨)

அன்னவன்றவஞ்செய்போதுவகத்தியன்வருதல்கண்டு *
சென்னியைக்குனியானாகச்சீறியேசாபமிட்டான் *
மன்னதையறிந்தறிஞமயேச்சுரன்றன்பாலன்பு *
துன்னநீயளிக்கவென்னவளித்தனன்தும்பியானான். (௨௰௩)

கானகத்திருந்துபன்னாள்கரிணியாய்க்கழித்துவேந்தன் *
ஞானநாயகன்பதத்தைநண்ணினனென்றுசொல்வான் *
மோனமாமிருடிநீரின்மூழ்கிடத்தாளைப்பற்றி *
ஈனமாமுதலையைப்போலிழுத்தனனாகூவென்பான். (௨௰௪)

மந்திரவிருடிதானுமனதினிற்றியானஞ்செய்து *
இந்தமாமுதலையாகியிருவெனச்சபித்துப்போனான் *
தந்தியின்றாளைக்கவ்வச்சக்கரத்திருகூறாக்கக் *
கந்தருவடிவமாகிக்கதிதனையடைந்தவாறே. (௨௰௫)

இத்தலந்தன்னிலுள்ளோர்யாவராகிலுமென்விண்டு *
பத்தராயிருந்தோர்க்கென்றும்பயமிலைத்துன்பமில்லைக் *
குற்றமுங்குறைவுமில்லைக்குலவழித்தாழ்வுமில்லைப் *
பற்றிடுவினையுமில்லைப்பகையிலைப்பரீச்சித்தேகேள். (௱௬)

சத்தியவசனமாகச்சாற்றுவேனுலகின்மீது *
அத்தியினுயிரைக்காத்தோனம்புயமலர்நற்றாளைப் *
பத்தியாற்றொழுதபேர்க்குப்பழவினைநீங்கிஞான *
முத்தியேபிறவிநீங்குமோக்ஷமுஞ்சித்தியாகும். (௱௭)

பெற்றிடுந்தந்தைதாய்சேய்பெண்டெனுஞ்சுற்றத்தாரில் *
நற்றியபொருளைநம்பினல்மிலையரியின்மீது *
பற்றியநிலையினிற்கப்பலிக்குநற்சருமமெல்லாம் *
உற்றிடுமுத்தியென்றேயுணாத்தனர்சுகருமப்போ. (௱௮)

மொழிந்திடுஞ்சுகனைநோக்கிமொய்நகைவதனத்தோடும் *
எழுந்துநின்றிறைஞ்சியத்தவிராஜனும்புளகமாகி *
அழுந்துமஞ்ஞானம்விட்டுயரிகலைதகேட்சஞானக் *
கொழுந்தெழும்விரக்காயன்புகொண்டுகைகூப்பிநின்றான் (௱௯)

புடவியிற்றருமநீதிபுரந்திடும்பரீச்சித்தேகேள் *
படவரவணையின்மேவும்பரமனார்பக்கம்நின்ற *
விடகளரன்மேகவாகன்வேதனைவிரும்பிடாமல் *
கடறருமாதைநோக்கிக்காதலோடுரைக்கலுற்றார். (௱௰)

மறந்திடாதெனதுநெஞ்சமலரின்மாமகளேயுன்னை *
மறந்திடுமடியாரொன்னைமனதுநொந்தழைக்கும்போது *
மறந்திடுஞ்சகலலோகவண்மையுமற்றுளோரை *
மறந்துசாதுவையேகாக்கவருவனென்றுரைக்கலுற்றார். (௱௰௧)

செந்திருமடந்தைதானுஞ்செப்புவாளரியைநோக்கி *
எந்தநேரமுமுன்பாதமிதையத்தினிலையாக்கொண்ட *
எந்தனுக்கினிவேறேதுயிறைவனேயுத்தன்பின்னே *
வந்தனனென்றுபின்னுமனமகிழ்ந்துரைக்கலுற்றாள். (௱௰௨)

தீனர்களிளைத்தபோதுசெல்வமீந்தருளவேண்டும் *
தீனரைப்பொருந்திநின்றதீவினையகற்றவேண்டும் *
தீனருக்குறுதியானசெல்வமுமளிக்கவேண்டும் *
தீனரக்ஷகனென்றியாருஞ்செப்பிடுந்தேவதேவே. (௱௰௩)

என்றிடுங்கமலமாதோடெழிலுடைக்கொண்டல்வண்ணன் *
நின்றிடுமூர்த்தியானகருடன்மீதேறிநேரில் *
துன்றிடுமுநிவர்வேதன்சுரர்பதியிடபமூர்த்தி *
அன்றவர்யாருங்கேட்கயடைவுடனுரைக்கலுற்றான். (௱௰௪)

அனைவருங்கேளுமிந்தவாகமவிதிப்படிக்குத் *
தினகரனுதியாமுன்னந்தெளிந்துநித்திரையினின்று *
மனதினிற்கள்ளமின்றிவாரணமோக்ஷந்தன்னை *
அனுதினந்துதிசெயன்பர்க்கருள்வனம்வீட்டையென்றே (௱௰௫)

சங்கத்தைத்தொனித்துத்தேவதேவனுஞ்சார்ங்கபாணி *
இங்கிதமாகச்சென்றனிணையில்வைகுந்தத்திற்குச் *
சங்கரனயன்மற்றோருமவரவர்தானஞ்சேர்ந்தார் *
பொங்கமாய்ச்சுகரீதெல்லாம்புகன்றனர்பரிச்சித்துக்கே. (௱௰௬)

தேவர்கள்வாழியெட்டுத்திசையிலுள்ளோர்கள்வாழி *
மூவரும்வாழியாதிமூலமும்வாழியிந்தப் *
பூவுலகெங்கும்வாழிப்பொதுவர்தங்குலமும்வாழி *
யாவரும்வாழிவாழியரமதுஜெயமாய்வாழி. (௱௰௭)

சுகர்பரிச்சித்துக்கன்பாய்சொற்கஜேந்திரன்மோக்ஷத்தை *
ஜகதலமிசையேவிரிச்சாற்றுவானோவென்னில் *
நகதரன்றனைவரர்த்தநற்குலவேங்கபூபன் *
மகவெண்வீறுங்கச்சிவாழ்திருவடியான்றானே. (௱௰௮)

கஜேந்திரமோக்ஷம்-முற்றும்.

இஃது

திருவண்ணாமலை, வேங்கடாசலமுதலியாரால் அடிக்கப்பட்டது.

தோத்திரம்

திருஆசிரியவிருத்தங்கள்

மூலபாடம்

பொற்களந்தைப்பதி-

முத்தமிழ்க்-

கவிவீரராகவமுதலியார்

செய்தருளியது.

இஃது

கையெழுத்துப்பிரதிகளில் - பாடந்தோறும் பிழைபடுகின்றதை
நோக்கி - அதைவிலக்கும்பொருட்டு - சென்னைமாநகரத்
துப் பிரபுக்களிலும் - புலவர்களிலும் - உபாத்தியா
யர்களிலும் பலரும் கேட்டுக்கொண்டதால் -
சென்னைக்கல்விச்சங்கத்துத்

தமிழ்ப்புலவர்

திரு-வேங்கடாசல
முதலியாரால்

பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து - பிழைகளைத் திருத்தி -
தமது சரஸ்வதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இது இவரது தமையனார் குமாரர்

திரு-வீரராகவசாமிமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகன சகாப்தம் - ௲௭௫௬ - ஜய வரு.

1834.

ஹரி

[illegible]ன்ருக.

துதிகவி.

விரகறிமுத்தமிழ்வீரராகவன் - - - *
வரகவிமாலையைவழுத்துந்தோறெலாம் - *
உரகனும்வாணனுமொக்கக்கூடினால் - *
சிரகரகம்பிதஞ்செய்யலாகுமே - - *

முதலாவது.

திருக்கச்சிநகர் -

பெருந்தேவித்தாயார்பதிகம்.

உலகமொருபதினாலுமுட்கொண்டவண்டங்களுன்கரக்கந்துகளுவம் - *
ஓர்தண்டகந்தகத்திரள்வெளிபடுத்தியுமொளித்தும்விளையாடல்புரியும் *
வலமையைப்பெற்றவொருசித்தனுன்பதியானமாயனவனவரதமுன் *
மழைமதர்க்கண்ணேவுதொழில்செய்யமணியோடுவனமாலையணிமார்பி
சலசநிகர்விழியினுமனத்தினுங்குடிகொண்டுசகலவுயிருந்தழைக்கத் [னும்
தயவுபுரிபெண்சகிரவர்த்திநீயுன்பெருமைசாற்றுதற்கெளிதாகுமோ *
அலர்தலைக்கலியாணகோடிநிலயத்தில்வாழதிகருணபாக்கியவதியே - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (க)

எத்தனைதரந்துதிக்கினுமஞ்சலிக்கினும்மெண்ணினுந்தயவுசற்றும் - *
இல்லாதிருக்கின்றவன்னெஞ்சுடைத்தேவரிருபொழுதுமபயவரதக் - *
கைத்தலம்விரிப்பரக்கரயுகளமபிநயக்கரமவர்தமைக்கனவினும் - *
கருதேனுனைப்பணியுமடியரடியாரடியர்காலினைவணங்குமடியார் - *
பத்தாமனத்தினினைப்பவர்தமக்குநிறைபரிவினிகலோகவாழ்வும் - *
பரலோகவாழ்வையுந்தருதெய்வநீயுன்பதத்தையேதொழுவெனம்மே *
அத்திகிரிகரிவரதர்சித்திரபணிமார்பத்திலமரும்வனிதாரத்தினமே - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (உ)

இருள்வருமனத்தரானாலுமுன்சந்நிதியினெதிர்வந்துபணிவரானால் - *
இந்நிலத்தவருக்குரத்நபூடணம்வரும்மிலகுபீதாம்பரம்வரும் - *

பொருள்வருந்தானியத்திரள்வருஞ்சுழிபெற்றபுரவியுங்கவிகையும்வரும் *
பொற்சிவிகைவருமத்தகரிவரும்புவியைப்புரக்கின்றவாண்மைவருமெய்த்
தெருள்வருந்திகழ்பெரும்புகழ்வரும்மட்டமாசித்தியும்வரும்பரத்தில் - *
தேவேந்திரபோகம்வருநான்முகன்பதவியிற்றிருவாழ்வுவருமுண்மைகாண்
அருள்வருகடைக்கணின்பெண்ணமுதமேகச்சியருளாளர்மார்பிலணியே *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௩)

வான்மேவுமமரர்திரள்சொரியுநாண்மலர்படவருந்திச்செவந்தபதமும் - *
வண்பட்டினைச்சாத்துகொடியெனநுடங்கியமருங்குலுந்தேவாமிர்தம் - *
தான்மேவுகலசநிகர்முலையுமேகாசமுந்தங்கவளையிடுசெங்கையும் - *
சங்கக்கழுத்துமங்கலநாணும்வேயெனத்தகுதிருத்தோளுமிருசேல் [கும்
மீன்மேவுமொருதாமரைக்குநிகர்நகைமுகமும்வெண்முல்லைமாலைசேரு
மென்குழற்சுருளுமென்கண்காணவந்தெனதுவினைதொலைத்தெனையாளு
ஆன்மேவுபெருமானுமலரோனும்வந்திக்குமற்புதக்கச்சிவாழ்வே [வாய்
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௪)

[டான்
மலைபெற்றமாதுனைப்போல்வளெனமொழிவர்புன்மதிபெற்றமலர்தரவ
மற்றனைப்போலவிறுபெற்றமணவாளனைவளம்பெறுபிறந்தகத்தில் - *
நிலைபெற்றுவாழவைத்தனளோதினந்தினமுநிறைபெற்றவவளரைப்பெண்
நீமுழுப்பெண்ணிரந்துண்டசிவன்மனைவியவணிலவுலகும்புரக்கும் - *
தலைபெற்றசோதிமணிமகுடபுருடோத்தமன்றன்மனைவிநீயாதலால் - *
சந்திரவிம்பானனியந்தவுமையுன்னையெத்தன்மையொப்பாள்சொல்லு
அலைபெற்றவேகவதிநதிபெற்றகச்சியிலகம்பெற்றசெல்வமயிலே [வாய்
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௫)

[வும்
மின்னையொத்தெழுபுனற்குமிழியொத்தவனிதனில்விளைவிலழிதனுவும்வாழ்
வெற்பொத்துநிலையாகநிற்குமெனவெண்ணியும்வெறும்பாவமடமாதரைப்
பொன்னையொப்பாரெழுதுசித்திரமொப்பார்நறும்பூவையொப்பாரெ
[னமனம்
புண்படநினைத்துமவமேசெய்துநாள்களைப்போக்கினேன்பிழைபொறுத்தற்
குன்னையொப்பாரில்லைபிழைசெய்வதற்கென்னையொப்பாருமில்லையெனையு
உகந்தெடுத்தவகையாள்வையோசற்றுமறிகிலேனுன்சித்தமென்பாக்கியம் [ம்
அன்னையொத்துலகாளுமத்திகிரிவரதர்க்கருக்காணியானபொன்னே - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௬)

இரதியும்பாரதியுமுபயசாமரைவீசவெற்றிநிலைக்கங்கைமாதும் - - *
இமகிரியணங்குமங்கலகௌரமேபாடவிந்திராணிசெந்தாமரைக் - *

ஸ்ரீ

பெருந்தேவித்தாயார்பதிகம்.

கரதலத்தாலடைக்காயுதவவள்ளியுங்கனதவரையானைமகளும் - - *
கர்ப்பூரவாரத்தியேந்தமேனைகைரம்பைகயல்விழியுருப்பசியுமே - *
பரதநடமாடவிதிசிவன்வச்சிரபாணிமுப்பத்துமுக்கோடிசுரரும் - *
பலமுனிக்கணமும்புகழ்ந்துகொண்டாடநின்பதிவரதனொடுகச்சியில் - *
அரதனக்கோயிலுறையுன்கொலுவைவர்ணிக்கவரவரசனாலுமாமோ - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௭)
[தொடும்

ஒளிகொண்டநவமணிச்செம்பொனோலைச்சுருளையுட்கொண்டகாதைத்
ஒண்கடைக்கண்ணிடங்கொண்டவருள்வெள்ளத்திலொருதுளியையென்
[மீதிலே
களிகொண்டுசிதறவிடிலுன்பத்தனென்றெனைக்கைக்கொண்டசூலபாசக்
காலனுந்தொடரான்மனங்கொண்டநான்மலர்க்கணைமதன்றனுமணுகான்
நளிகொண்டபூவிலுறைமகனுமென்சென்னிதனினல்லெழுத்தேயெழு
[துவான்
நவக்கோளுமேகாதசத்தானபலனுதவுநகைகொண்டமுகனொடெழுதண்
அளிகொண்டமைத்துநின்பதியத்திகிரிவரதனடிநிழலில்வைப்பனம்மே
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௮)

பூகத்திலுறைகவிநிமிர்த்தவாலரவெனப்பூவாதவலரிவெருவும் - - *
பொழுதிலப்பரிதிவிடுகிர்ணம்வார்கோலெனப்புன்கவிக்குலமும்வெருவும்
மாகச்சிவளநகரில்வாரணக்கிரிகோயில்வாழ்தேவராசனொடுநீ - - *
வளர்தமாலத்தருவினைச்சேருமொருகனகவல்லியெனவயிறுநிறைசூல் - *
மேகத்தொடெழுசோதிமின்னெனவெழுந்தருள்விதங்கண்டுபேரின்பமாம்
வெள்ளத்தழுந்துபரிசுத்தமனமண்ணவரின்விண்ணவர்மிகப்பெரியரோ *
ஆகத்தினெழுசக்கிரவாகத்தனத்தினாலசைசிற்றிடைக்கமலையே - - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௯)

ஓதிநிறமேகண்டுநாணிமுகின்மலையேறுமுன்னிணைக்கண்ணேசலால் - *
ஒண்கயலினம்புனல்கிடக்குமுன்முகத்தினுக்கொவ்வாதிருத்தலாலே - *
சோதிமதியுடல்வற்றுமுன்மிடற்றுனலந்தொலைசங்கமின்னமலறும் - *
திணைமுலையினெழில்பெறநிமிர்ந்தவடகனககிரிசுரனாச்சுமந்துநிற்கும் *
சாதிநவரத்தினவளையிடுகரத்தாலுமுன்சரணத்தினாலும்வெட்கித் - *
தாமரைகள்பங்கத்தையடையுமுன்னவயவந்தம்மைவர்ணிக்கவசமோ - *
ஆதிநடுவந்தமிலாதபொருளேகச்சியமர்துரைப்பெண்ணேதொழும்
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௰)

கூடுறைபசுங்கிளிக்குசிதமொழிசொல்லிக்கொடுத்தந்தமொழியச்சகம் *
கூறுகாலையில்வினவிமகிழுமவர்போலவேகோகனகனுதியிமையோர் - *
நாடுதற்கரியநீயென்மனத்தாமரையினுடொறுமிருந்துதமிழ்நூல் - *
நலதயைறிவிதத்தற்பனுகியவெனைக்கொண்டுநானுவிதக்கவிகளைப் - *
பாடுவித்திருசெவிக்கொண்டுளரங்களிகொள்வைபலகாலுமுன்விநோத
பகரவசமோகடவுளரன்னமேயென்னமேபரிதியைக்கோபுரதலத் [ம்
தாடுகொடிதொடுகச்சியருளாளர்கண்மணியினகலாதுலாவுபாவாய் - *
அடியவர்க்காவியேயநுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௰௧)

* முற்றும். *

இரண்டாவது.

திருக்கச்சிநகர்-

வரதராசப்பெருமாள்-
பஞ்சரத்தினங்கள்.

ஸ்ரீ: ஆவது. [லம்

வரதவென்றொருதரஞ்சொன்னபேர்புவியையாள்வாருனதுகோயில்வ
வந்தபேரிந்திரனாரடைவருன்பொன்மயவிமானத்தினைத்தொழுதபேர்
பிரமனுலகினில்வாழ்வர்கரிகிரியிலேறியெம்பெருமானின்னடிபணிந்தோர்
பெருவிரசையக்கரையிலேறியழிவற்றமுத்திபெறுகுவரிவைகையமோ *
பரமபுருடாபரமபத்தப்பிரீயாபரமபாவனாபரமகருணா - - - *
பாங்காவிகங்கரதாங்காமகாசார்ங்கபாணீமிருகாங்கானனா - - *
சரணமணிநூபுராருசிரதரகோபுரவிசாலகாஞ்சீபுரேசா - - - *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - (௧)

அந்தமணிமௌலிபுனைவசுகுலவிமானங்களச்சுவினிதேவதைகளூர் - *
அற்புதவிமானமரைகைத்துணைவிமானம்வந்தனுதினஞ்சூழவவைமேல் *
குந்தனப்பொற்சுடனைவீசல்புரியுன்புண்ணியகோடிவிமானமொருகால்
கும்பிடப்பெற்றபேர்முன்செய்வினைகோடானுகோடியோடப்பெறுவ
நந்தனவனத்தினுங்கயல்பொருவனத்தினுநாறுபலமலரினூறும் [ர்காண்
நனையுண்டுகளிகொண்டுதிரிவண்டுபுடைசென்றுநங்கையர்பதங்கைவதன
சந்தனகுசங்களரவிந்தமென்றலமருந்தண்டமிழ்க்கச்சியோனே [ம்
சயதேவராசனேலோசனும்போசனேசததகோடிரவிதேசனே - (௨)

சதுமறையுமறியொணுவொருவன்வந்தான்முத்திதரவல்லதலைவன்வந்தான் *
சகலாண்டநாதன்வந்தானடியர்செய்தபிழைசற்றுமிதயத்திலெண்ணு - *
முதல்வன்வந்தானித்தியவிபவன்வந்தானென்றுன்முன்னூதுவிருதுசின்னம் *
முச்சகமுமெய்ச்சுமிதைமற்றுமுரைதெய்வங்கண்முன்னூதிலவெட்குவார்காண்
மதுரகவிபணிமாறன்வண்பொய்கைபேய்பூதன்மழிசைமன்குலசேகரன் - *
மங்கைநாதன்கோதைப்புதுவைவருமுனிபாணன்மண்டங்குடிக்கதிபனும் - *
ததியர்துதிசெயவோதுகவிமாலைபுனையெங்கள்சாமியேகச்சியோனே - *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - - (௩)

பாடுமவராடுமவரருமையுன்போலவறிபவராரரங்கமென்னும் - - - *
பதியரையர்வந்துநின்திருவடிவணங்கியிசைபாடியாடித்துதித்து - - *
விடருள்கவென்னுமெதிபதியையருள்கெனவும்வினவிநன்றென்றருளினய்
வீறுமனுசனையுதவுதிகௌத்துவமணியைவீசெனினுமீவைகண்டாய் - *
நீடியசெழுந்தாழைநெற்றுமாவினின்மாவினிறைகனிபலாவிற்பலா - *
நேர்பழங்கமுகினிற்கமுகின்முதிர்காய்கதலிநிரையினிற்கதலிபலமும் - *
தாழுமப்பலமுமுருகினில்விழமந்திபாய்தண்பொழிற்கச்சியோனே - *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - - (௪)

எத்திசையுமிகமெய்ச்சுகுருகாபுரிப்புளியிடத்திற்குமகிழ்மாறனும் - - *
எங்கள்கற்பகநல்குபலகனியெனத்தக்கவிளைந்துநூறுகவியும் - - *
சித்தமகிழ்வைத்தருதல்போலுனக்கலைகைநிகர்சிறியனேனுதவுன்சொற்
செய்யுளுமகிழ்ச்சிதருமெவ்விதமெனிற்றினஞ்செவியுணர்வுபெற்றபெரி
[யோர்க்
குத்தமகலைத்திறமுணர்ந்தநல்லுணர்வுளோரோதுமொழியுவகையுதவும் *
உன்மத்தர்சொலலுநகையுண்டாகவேயுவகையுதவல்செயுமற்றவிதமே *
சத்தமழைதவழ்காவில்வளர்கிளியுமாழ்வார்தமிழ்ப்பகர்திருக்கச்சியாய் *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - (௫)

* முற்றும். *

௨ ஆவது. இதுவுமது. வேற்றுமகுடம்.

காலனூர்தமர்வந்துகைப்பாசம்வீசவுங்கண்கள்பஞ்சடையவிருகால் - *
கைகளுஞ்செயலின்மைபெறமொழிகள்குழறிடக்கண்டத்துளையடைப்ப
பாலரொடுமனைவிதமரழவுயிர்ப்பொழுகலொழிபருவத்தினுள்ளரலமரும் *
பாவியேன்முன்னீலமலைபோலநின்றருட்பார்வைவைத்தெனையாளுவாய்
சாலவிருகூலத்துமுத்தெறிந்தனுதினந்தத்திவருமலைமலிநறுந் - - *
தண்புனற்பொன்னிசூழ்திருவரங்கத்தினுந்தடநெடுங்கடலிடத்தும் - *
ஆலிலையினுந்துயிலுமாயனேகொடியாடுமணிமதிட்கச்சிமூதூர் - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (௧)

சூத்திரியசைத்தபடிபாவைநின்றாடுநீசூழ்ந்தபடியுயிரனைத்தும் [ன்றே
தொழில்புரியுநன்மைபுரிசனர்தீமைசெய்தபேர்சொர்க்கநரகடைவரெ
சாத்திரம்விதித்தனையுனக்குத்தரஞ்சொலுஞ்சதுரராருன்னுடைமையாம்
சனனவேலையிலவிழிலார்சொத்தநின்சார்புசாரும்படிக்குவைப்பாய் - *
மாத்திருவயோத்தியெனுமுனதுமூதூரிலேமருவியசராசரமெலாம் - *
வானவருமிச்சித்துமெய்ச்சுபதவியில்வாழவைத்தவருள்விழிமேகமே - *
ஆத்திரவர்களிக்கவுல்காத்திரடளிர்க்கவேயன்றாதுகச்சிமாலே - - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே. - (௨)

உலகறியவருமலரிபூவலரிசோமனுமுடித்திவிடுசோமனச்சேய் [பொன்
ஸ்ரீரஞ்சேய்புலவனிரவழன்றலைபுலவனெண்பொன்மிகவொளியற்ற
இலகுசுடர்வெள்ளிவெண்கலமும்விலையுறமந்தனென்பவன்புத்திமந்தன்
இருநாகமுந்துத்திநாகமெனவுள்ளடியரொண்ணுவர்பயப்படுவரோ - *
திலகமெழுதியசிறியபிறைநுதலிநெருவளிதைசித்தங்களிக்கவிண்ணில் *
சென்றுபலதேவர்செவிசெவிடபடவெண்சங்குசெவ்வாயின்வைத்தூதிமு
அலர்மலிதருங்கற்பதருவைக்கொணர்ந்தித்தவனிநடுகச்சிமாலே [ன்
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (௩)

நீயுலகமுதல்வனெனுமுறைமைசரிராசனுனிசிலவத்துவினுநிற்கும் - *
நிலைமைபிரகலாதனுன்றூத்திதரவல்லனெனுநீர்மைகண்டாகர்னனுல் - *
மாயைபுரியினுமடியவர்க்கெளியனென்னும்விதமழிசைமுனிவரனுலுநீ
மண்ணுலகுதன்னில்வெளிபண்ணினையுனைத்தொழாமன்பதைகள்பேய்
[களலவோ
சேயரிபடைத்துக்குடங்கையினகன்றிணைச்சேலெனமிளிர்ந்துகுழைமேற்
சென்றடிக்கடிமீளவந்துசெங்குமிழின்மறிசினவேலைவென்றமைக்கண் *
ஆயிழைசுமந்தருமாலைமாதர்நடமிடுகோயிலாயிரந்திகழ்கச்சிவாழ் - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (௪)

ஒருகாசுமற்றவன்பலதானமும்புரியவுன்னும்விதமென்னமுன்னம் - *
ஒருநல்மைபுரிகிலேனுனதூரிலேயிருந்துன்னடியரொடுபழகவும் - *
வருகாரிமாறனுரைதமிழ்மறைபடிக்கவும்மாசற்றபொருளறியவும் - *
வருதினமுனைத்தொழவுமெண்ணினேனடியேன்மனத்தெண்ணநிறைவே
இருகாதிலிடுமணிக்குழைசிரத்திருமகுடமிருகரத்திகிரிசங்கம் [ற்றுவாய்
இருபுயக்கனககேயூரமார்பின்மணியிடைசாத்துபொன்னுடையும் - *
அருகாதசுடர்பரப்பவுமிருண்டிலகுருவினத்தனேகச்சியோனே - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (௫)

* முற்றும். *

ரு ஆவது. இதுவுமது. வேற்றுமகுடம்:

முன்னமொருசிலையழகின்மாதுமீர்வாளனையமுதகோத்திகுலவேந்தனு
முனைவாளிகட்டளவில்கரியானகர்ப்பமணிமுடிராசபுத்திரனுமலா [ம்
தன்னநடையுடையபெண்ணுணுமாகத்திருவருட்செய்தசாமிமிகவும் - *
அஞ்ஞானியானவெனையமைநொடியிலவிஞ்ஞானியாக்குதலுனக்கருமை
உன்னதபுசாதண்டவுத்தண்டகோதண்டவுகவிரசமரப்பிரசண்டா [யோ
உற்புல்லதாமரசத்வயுகளசமநேத்திரவுசிதசுகுமாநகாத்திரா - - *
கன்னிகாமணிபெருந்தேவிநயனானந்தகரகாஞ்சிபுரநிவாசா - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - - (க)

அண்டர்குலமெத்தனையவைக்கேகநாதனீயகிலவத்துவுநின்பொருள் - *
அப்பொருளிலிவைதருதியென்றிரந்திலெனின்னையடியேனிரத்தலிது
மண்டுதிரையெறிகங்கைவந்தநின்பதகஞ்சமறவாதுசிந்தித்திடும் [கேள்
மதியுதவவேணுமதுதருவையேல்வைகுந்தவாழ்வெலாமென்றுகண்டா
புண்டரீகவசிட்டநாரதசுகாதிமுனிபுங்கவத்தோத்திரபாத்திரா [ய்
புசகேந்திரபணசங்கரங்கநடனுதிங்கபூதரவராதபத்திரா - - - *
கண்டவிடமலினபசுபதிசாபகண்டனுகாகுத்தகுலமண்டனு - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - (உ)

அந்தமதராபுரியின்மிருகமதபடீரத்தையருளினளங்கவக்கிரம் - *
அத்தனையுமக்கணநிமிர்த்தனையெனப்புகல்வரவ்விதமுனக்கருமையோ*
இந்தநிலமுதிர்கருங்காலியடிவளைதுண்டமெனவலிதுகோரணலாகும் - *
என்மனதுசெம்மையாய்நிற்கும்வகைபுரிவையேலெளியெனற்புதமடை
நந்தகோபகுமாரயதுகுலோத்தமவீரநவநீதசோரதீரா [குவேன்
நாளீகநாபமதுசூதனபுராதனநரகாசுரச்சேதன - - - - *
கந்தமதசலபத்திரகசராசசீவோபகாரகாஞ்சீவிகாரா - - - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - (ங)

சங்கரனிருத்தலிற்சுத்தமானதுரசதசைலமதில்பரிசுத்தனும் - - *
சம்புவுமகாசுத்தநதியென்றுகங்கைசடைதாங்கினனக்கங்கைநின் - *
பங்கயபதப்பரிசமொருகாலமடைதலிற்பரிசுத்திபெற்றதென்பார் - *
பலகாலுமுன்றனைமனம்வைத்தபாகவதர்பரிசுத்தமோதவசமோ - *
அங்கசகிர்டசமமீனகுசபாஞ்சாலியபிமானதனரக்ஷகா - - - *
ஆலோலகலலோலசாலகனகோலாகலாம்போதியோகசயன - - *
கங்கணவிராசிதகரத்துவந்தமேதினீகாந்தாமனோநாயகா - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - (ச)